## சுருக்கம்

பாசனம் – திருநெல்வேலி மாவட்டம் – தாமிரபரணி பாசன அமைப்பின் கீழுள்ள வடக்கு கோடை மேலழகியன் கால்வாய், தெற்கு கோடை மேலழகியன் கால்வாய், நதியுண்ணி கால்வாய் மற்றும் கன்னடியன் கால்வாய் ஆகிய 4 கால்வாய்களின் கீழ் பாசனம் பெறும் நிலங்களில் 2011ம் ஆண்டு கார் சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 14.06.2011 முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ப்பி2) துறை**

**அரசாணை (வாலாயம்) எண் 229** **நாள் : 13.06.2011.**

**திருவள்ளுவர் ஆண்டு 2042**

**வைகாசி 30**

படிக்கப்பட்டது:

1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண் பவெ / ஔ6/ 823 / 2011, நாள் 04.06.2011.
2. நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கடித எண் தொநுபி / வஅ3 / கோ 3592 / தாமிரபரணி / 2011, நாள் 06.06.2011.

*****

**ஆணை :**

தாமிரபரணி பாசன அமைப்பின் கீழுள்ள வடக்கு கோடை மேலழகியன் கால்வாய், தெற்கு கோடை மேலழகியன் கால்வாய், நதியுண்ணி கால்வாய் மற்றும் கன்னடியன் கால்வாய் ஆகிய 4 கால்வாய்களின் கீழ், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் வட்டங்களில் பாசனம் பெறும் நேர்முக மற்றும் மறைமுகப் பாசனப் பரப்பாகிய 18090 ஏக்கர் நிலங்களில் கார் சாகுபடிக்காக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 14.06.2011 முதல் 120 நாட்களுக்கு 3015 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி.

நகல்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.

முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.

பொதுப்பணித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.

**( ஆணைப்படி / அனுப்பப்படுகிறது )**

**பிரிவு அலுவலர்**